ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/25 - 2020 ජූලි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.30

*2186/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154ஊ ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 154இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் விதிகள்**

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154ஊ ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 154இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட, "மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான விதிகள்" இனை வெளியிடுவதாக இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

றொஷான் குணதிலக,
ஆர்டப்பீ அண்ட்பார் வீஎஸ்வீ யூஎஸ்பி பீஎச்டி (சிறப்பு)
எப்ஜஎம் (ஸ்ரீ லங்கா) என்டிசீ பீஎஸ்சீ,
மார்ஷல் ஒப் த ஸ்ரீலங்கா, எயார் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபைக் கட்டிடம்,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
பத்தரமுல்லை,
2020, யூலை 30.

1A - PG 5078 — 77 (2020/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் மேல் மாகாண சபை நிதியத்திற்கு மற்றும் மேல் மாகாண சபை நிதியத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் சட்ட ரீதியான அதிகார சபைகளின் பெறுகை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், மேல் மாகாண சபையின் நிதியத்தில் மேற்கொள்ளப்படும் பெறுகை செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்காகவும், தாமதமின்றி மாகாண மக்களுக்காக மிகவும் நன்மை பயக்கும் மற்றும் நேர்மறையான பெறுகைச் செயற்பாடொன்றினை மேற்கொள்வதற்காக இந்த விதிகள் அமுல்படுத்தப்படுகின்றன.

2. இந்த விதிகள் மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான விதிகள் என அழைக்கப்படும்.

3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டு நெறிகளின் கட்டளைகள், வழிகாட்டல்கள், அதற்குரியதாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் இந்த விதிகளின்கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் கீழ் மற்றும் காலத்திற்குக் காலம் ஆளுநரினால் ஏற்றுக்கொள்ளப்படுபவையும் திருத்தங்களுடன் மேல் மாகாண சபை நிதியத்திற்கு மற்றும் மேல் மாகாண சபை நிதியத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் சட்ட ரீதியான அதிகார சபைகளுக்குரிய நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கு உரியதாக வேண்டும் என இங்கு பணிக்கின்றேன்.

4. (1) மேல் மாகாண சபை நிதியத்திற்கு உரியதாக மற்றும் மேல் மாகாண சபை நிதியத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் மேல் மாகாண சபையின் கீழேயான சட்ட ரீதியான அதிகார சபைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கு உரியதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பெறுகைக் குழு மற்றும் அந்தந்த குழுக்களுக்கு அதற்கான அதிகாரத்தினை வழங்குவது பின்வருமாறு இடம்பெற வேண்டும்.

| | பெறுகைக் குழுவின் வகை | அதிகாரத்தினை வழங்குதல் |
|---|---|---|
| அ | மேல் மாகாண அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு | மேல் மாகாண அமைச்சரவை |
| ஆ | பிரதம செயலாளரின் பெறுகைக் குழு | மேல் மாகாண பிரதம செயலாளர் |
| இ | அமைச்சு பெறுகைக் குழு | பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர் |
| ஈ | திணைக்கள பெறுகைக் குழு | பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர் |
| உ | செயற்றிட்ட பெறுகைக் குழு | பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர் |
| ஊ | பிரதேச பெறுகைக் குழு | கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர் |

(2) மேல் மாகாண சபையின் பொறியியல் விடயப் பொறுப்பு பிரதிப் பிரதம செயலாளரின் நடவடிக்கைகளை இலகுபடுத்த பிரதம செயலாளரினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க பின்வரும் பெறுகைக் குழுக்கள் செயற்படலாம்.

| | பெறுகைக் குழுவின் வகை | அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துதல் |
|---|---|---|
| அ | பிரதம செயலாளர் பெறுகைக் குழு | மேல் மாகாண பிரதம செயலாளர் |
| ஆ | பொறியியல் விடயப் பொறுப்பு பிரதிப் பிரதம செயலாளர் பெறுகைக் குழு | மேல் மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) |
| இ | கட்டடப் பணிப்பாளர் பெறுகைக் குழு | மேல் மாகாண கட்டடப் பணிப்பாளர் |
| ஈ | பிரதேச பொறியியலாளர் பெறுகைக் குழு | மேல் மாகாண கட்டடப் பணிப்பாளர் |

(3) மேலே (1) உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் பெறுகைக் குழுக்களுள் அமைச்சரவைப் பெறுகைக் குழுவினைத் தவிர ஏனைய எல்லாப் பெறுகைக் குழுக்களையும் நியமிப்பது மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய பிரதான கணக்குப் பொறுப்பு அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) மேலே (2) ஆம் உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் பெறுகைக் குழுக்களை நியமிக்கும்போது மேல் மாகாண பிரதம செயலாளர் பெறுகைக் குழு, பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட வேண்டியதுடன், ஏனைய பெறுகைக் குழுக்களை நியமிப்பது பிரதம செயலாளரின் சம்மதத்துடன் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) இனால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(5) மேல் மாகாண சபையினால் அமுல்படுத்தப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட ரீதியான அதிகார சபை ஒன்றின் கீழ் நியமிக்கப்படும் பெறுகைக் குழு மேலே (1) ஆம் உப பிரிவின்கீழ் நியமிக்கப்படும் திணைக்கள பெறுகைக் குழுவிற்கு மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் நியமிக்கப்படும் பிரதேச பெறுகைக் குழுவிற்கு இணைந்த வகையில் செயற்பட வேண்டும்.

5. பெறுகைக்குரிய ஒவ்வொரு பெறுகை செய்யும் நிறுவனத்தினாலும் முன்பெறுகை செயற்பாடுகளுக்குரிய தேவைகளை இனங்காணுதல், திட்டமிடுதல், விபரக் குறிப்புகளைத் தயாரித்தல், ஏலம் கோருதல் அத்துடன் ஒப்பந்தக் கையளிப்பு வரையிலான செயற்பாடுகள் அந்தந்த நிறுவனத்தின் கீழேயான நிர்வாகப் பிரிவின் கீழும், ஒப்பந்தக் கையளிப்பு தொடக்கம் ஒப்பந்த முகாமைத்துவம் உள்ளிட்ட ஒப்பந்தம் நிறைவு வரையிலான செயற்பாடுகள் அந்த அந்த பெறுகை செய்யும் நிறுவனத்தின் கீழ் நிதிப் பிரிவின் கீழும் பேணப்பட வேண்டும்.

6. பெறுகைச் செலவின் பெறுமதி பத்து மில்லியனைவிடக் கூடி ஒவ்வொரு பெறுகைச் செயற்பாட்டிற்கும் உரிய பெறுகைக் குழுவினை நியமிக்கும் போது, அதற்கு இணைந்த வகையில் உரிய பெறுகை நடவடிக்கையினை ஒழுங்குபடுத்துவதற்காக அதனுடன் தொடர்பில்லாத வெளியிலுள்ள மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று உரியவர்களினால் நியமிக்கப்பட வேண்டும்.

7. (1) அமைச்சரவையின் பெறுகைக்கு உரியதல்லாத எனினும் பெறுகையின் மொத்தச் செலவின் பெறுமதி பத்து மில்லியனை விடக் கூடிய ஒவ்வொரு பெறுகை ஒன்று தொடர்பாகவும் பெறுகையுடன் தொடர்புடையவர்களினால் பெறுகைக்குரிய பின்வரும் விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய பிரதான கணக்குப் பொறுப்பு அலுவலருக்கு விடயத்தினை அறிவித்து, ஏலம் கோருவதற்கு முன்னர் அதற்கான அங்கீகாரத்தினைப் பெற வேண்டும்.

(அ) உரிய பெறுகைக்காக ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள முறை ;
(ஆ) வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு இணங்குவதாக ;
(இ) உத்தேச பெறுகை முறை ;
(ஈ) பெறுகையானது செயற்றிட்டம் ஒன்று தொடர்பானவிடத்து, அந்தச் செயற்றிட்டம் தொடர்பாக சாத்தியக்கூற்று ஆய்வு நிறைவடைந்துள்ளது எனவும் அத்துடன் செயற்றிட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்குரிய எல்லா விடயங்களும் பூரணமாகி உள்ளன எனவும்,

(2) மாகாண அமைச்சரவை பெறுகை நடவடிக்கைக்குரிய பெறுகையொன்றாகுமிடத்து மேலே (1) உப பிரிவின் கீழேயான விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்குப் பொறுப்பு அலுவலரினால் மாகாண அமைச்சரவைக்கு விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

8. பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்ளும் அத்தியாவசியம் தொடர்பாக பிரதம செயலாளரிடம் விடயங்களை முன்வைத்து, பிரதம செயலாளரின் அனுமதியினை அதற்காக பெற்றிருக்காதவிடத்து, வருடாந்த பெறுகை நடவடிக்கைத் திட்டத்திற்கு வெளியில் எந்தவொரு பெறுகை நடவடிக்கையையும் உரியவர்களினால் மேற்கொள்ளக்கூடாது.

9. பெறுகை நடவடிக்கைக்குரிய கொடுப்பனவிற்கான ஒவ்வொரு பட்டியல் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பெறுகை செய்யும் நிறுவனத்தினால் பெறுகை செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட தரப்பினர் சம்பந்தப்பட்ட கட்டண விவரக்குறிப்புகள், மதிப்பீடு மற்றும் பெறுகை ஒப்பந்தம் ஆகியவற்றுடன் முழு வகையிலும் இணங்குவதாக சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

10. (1) ஒவ்வொரு பெறுகை செய்யும் நிறுவனத்தின் கீழும் பெறுகை நடவடிக்கைக்கு உரிய ஒவ்வொரு அலுவலரினாலும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பெறுகை செய்யும் நிறுவனத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

(அ) பெறுகையின் ஒவ்வொரு படியும் இந்த விதிகள் மற்றும் அரசின் பெறுகை வழிகாட்டலுக்கு இணங்குகின்றதென,

(ஆ) பெறுகை நடவடிக்கைக்குரிய எல்லாப் பகுதியினரோடும் தேவையான தொடர்பினை பேணிச் செல்லப்படுவதாக,

(இ) பெறுகைக்கான முன் தகுதியைப் பரிசோதித்துப் பார்ப்பது தேவையானவிடத்து, அதற்குரிய அழைப்பிதழ் தயாரிப்பு, மதிப்பாய்வு, ஒப்புதல் வழங்குதல் குறித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை ஒருங்கிணைத்தல்,

(ஈ) விவரக் குறிப்புகள் மற்றும் ஏல ஆவணங்களின் வரைவு மற்றும் மறு ஆய்வு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை ஒருங்கிணைத்தல்,

(உ) மதிப்பீட்டு அறிக்கைக்காக தரவு மற்றும் தகவல்களைத் தயாரித்தல்,

(ஊ) ஏலம் கோர அழைப்பு விடுத்தல்,

(எ) பெறுகைக் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களுக்காக வசதிகளை வழங்குதல் மற்றும் தொடர்புடைய அறிக்கைகளை விநியோகித்தல்,

(ஏ) பெறுகைக் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வேண்டுகோள் தொடர்பாக, பிரதிபலிப்பினைக் காட்டுதல்.

(2) ஒவ்வொரு பெறுகை செய்யும் நிறுவனத்தின் கீழும் பெறுகைக்குரிய கொடுப்பனவு நடவடிக்கைக்குரிய ஒவ்வொரு அலுவலரினாலும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பெறுகை செய்யும் நிறுவனத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும் :

(அ) பெறுகை ஒப்பந்தம் வழங்குவது தொடக்கம் முகாமைத்துவம் உள்ளடங்கலாக ஒப்பந்தம் முடியும் வரையிலான நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென திருப்திப்படுவதற்கு ஏற்ற முறையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று ;

(ஆ) கொடுப்பனவு மற்றும் உரிய ஒப்பந்தத்தின் நிறைவு உரிய முறையில் நிகழ்ந்துள்ளது என உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென ;

(இ) கொடுப்பனவிற்கான செலவுகள் ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட செலவு மதிப்பீட்டிற்கு இணங்குகின்றதென ;

(ஈ) உரிய கொடுப்பனவு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகின்றனவென.

11. இந்த விதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைக்கு உரியதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டு நெறிகள் மற்றும் கட்டளைகள் மற்றும் அதற்குரியதாக காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஆலோசனைகள், பணிக்கப்பட்ட படிவங்கள், ஒவ்வொரு பெறுகை குழுக்களும் உரியதாக்கிக்கொள்ள வேண்டிய நிதிக் கட்டுப்பாடுகள் போன்ற விடயங்கள் ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் தேவையான திருத்தங்களுடன் உரியதாக வேண்டும்.

12. மேல் மாகாண சபை நிதியத்தில் மற்றும் அந்த நிதியத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் மேல் மாகாண சபையின் கீழேயான சட்ட ரீதியான அதிகார சபைகளினால் மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கு உரியதான ஒப்பந்தக் கையளிப்பு தொடர்பான முடிவுகள் சம்பந்தமாக அதிருப்தி அடையும் நபர்களின் மேன்முறையீடு, அரசின் பெறுகை வழிகாட்டு நெறிகளின் பணிப்புரைகளுக்கு இணங்க ஆளுநருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் ஆளுநரினால் அதற்கெனக் குறிப்பாக நியமிக்கப்பட்ட சபையின் அவதானிப்புக்களை கருத்தில் கொண்டு தீர்க்கப்பட வேண்டும். மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டு நெறிகளின் கீழ் மேன்முறையீடுகளுடன் தொடர்புடைய எல்லா ஏற்பாடுகளும் இந்தப் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

13. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் சொற்கள் தொடர்பாக பொருள் கோடல் தேவைப்பட்டாலொழிய -

"மாகாணம்" என்பது, மேல் மாகாணமும்,

"ஆளுநர்" என்பது, மேல் மாகாணத்தின் ஆளுநரும்,

"பிரதம செயலாளர்" என்பது, மேல் மாகாணத்தின் பிரதம செயலாளரும்,

"பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர்" என்பது, மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்கு விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள கருத்தும்,

"கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர்" என்பது, மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள கருத்தும்,

என்ற பொருளாகும்.

14. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய சொற்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.

08-309

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.